தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.07.2013**

**நீர்வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணை முன்கூட்டியே திறப்பு: ஜெயலலிதா அறிவிப்பு**



காவிரி டெல்டாவில் சம்பா சாகுபடியை மேற்கொள்ள வசதியாக, மேட்டூர் அணையில் இருந்து வரும் 2-ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

முன்னதாக, ஆகஸ்ட் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படும் என்று அவர் தெரிவித்திருந்தார். மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து ஏற்கெனவே நிர்ணயித்த தேதிக்கு முன்பாகவே வரும் 2-ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்கப்படுகிறது.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

கர்நாடகத்தின் கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகள் முழுக் கொள்ளளவை அடைந்துள்ளதாலும், கர்நாடக காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் கடந்த 27 மற்றும்

28 ஆகிய தேதிகளில் தொடர்ந்து கனமழை பெய்ததாலும், கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளில் இருந்து சுமாராக நாளொன்றுக்கு விநாடிக்கு 90 ஆயிரம் கனஅடி அளவுக்கு உபரி நீரி தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து கணிசமாக உயர்ந்து கொண்டு வருகிறது.

**ஆடிப் பெருக்கு விழா:** இப்போதுள்ள நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வந்தால், மேட்டூர் அதன் உச்ச அளவான 120 அடியை வரும் 3- ஆம் தேதிக்குள் எட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே குடிநீருக்காகவும், ஆடிப்பெருக்கு விழாவுக்காகவும் மேட்டூர் அணையில் இருந்து விடுவிக்கப்பட்டு வரும் விநாடிக்கு 6 ஆயிரம் கனஅடி நீரினை திங்கள்கிழமை முதல் (ஜூலை 29) முதல் விநாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக உயர்த்தி விடுவிக்க உத்தரவிட்டுள்ளேன்.

**ஆகஸ்ட் 2-ல் திறப்பு:** சம்பா சாகுபடிக்காக வேளாண் பணிகளை விவசாயிகள் முன்கூட்டியே தொடங்கியுள்ளதைக் கருத்தில் கொண்டு, காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து ஆகஸ்ட் 2 முதலே பாசனத்துக்கு நீர் திறந்து விடப்படும்.

இதன் மூலம், மேட்டூர் அணைக்கு வரும் நீர் முழுவதும் வீணாகாமல், காவிரி, வெண்ணாறு மற்றும் கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள கிளை ஆறுகள் மற்றும் வாய்க்கால்கள் ஆகியவற்றுக்கு நீரினை பகிர்ந்தளிக்கவும், ஏரிகளில் நீரினைச் சேமிக்கவும் வழிவகை ஏற்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டும், இந்த ஆண்டும்: மேட்டூர் அணையின் முழு கொள்ளளவு 120 அடியாகும். திங்கள்கிழமை மாலை நேரப்படி, அணையில் நீரின் கொள்ளளவு 100.85 அடியைத் தாண்டியிருந்தது.

இது, 65.94 டி.எம்.சி.யாகும். கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் அணையில் நீரின் கொள்ளளவு 74.65 அடியாக அதாவது 36.83 டி.எம்.சி.யாக இருந்தது. அணைக்கு இப்போது வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், ஆகஸ்ட் 1 அல்லது 2-ஆம் தேதிக்குள், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவை எட்டும் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியது**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாகப் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி, அவற்றிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

காவிரியில் திறக்கப்படும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால், கடந்த ஜூன் 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கடந்த 2011, நவம்பர் 6-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியாக இருந்தது. அதற்குப் பிறகு இப்போதுதான் 100 அடியைத் தாண்டியுள்ளது.

பூஜைகள் நடைபெற்றன: அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியதால், அணையின் இடது கரையில் உள்ள 16 கண் மதகுப் பகுதியில் பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் கந்தசாமி, உதவிச் செயற்பொறியாளர் கோவலன்,

மேட்டூர் நகர்மன்றத் தலைவர் லலிதா சரவணன், வருவாய்க் கோட்டாட்சியர் சந்திரன் உள்ளிட்டோர் சிறப்பு பூஜைகள் நடத்தினர். பின்னர், அணைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியதால், அணை கடல் போல் காட்சியளிக்கிறது. இதைக் காண்பதற்கு சேலம் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இதனால், அணையின் 16 கண் பாலம் திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

கூடுதலாக 4,000 கன அடி நீர் திறப்பு: மேட்டூர் அணையில் இருந்து குடிநீருக்காக நொடிக்கு 6,800 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை 4 மணி முதல் கூடுதலாக 4 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. இப்போது அணையில் இருந்து மொத்தம் நொடிக்கு 10,800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பிலிகுண்டுலுவுக்கு 79,000 கன அடி நீர்வரத்து: காவிரியாற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு திங்கள்கிழமை காலை நொடிக்கு 85 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. இது படிப்படியாகக் குறைந்து 79 ஆயிரம் கன அடியானது.

ஒகேனக்கல் அருவிப் பகுதிகளில் உள்ள பாறைகள் தெரியாத அளவுக்கு நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அருவிப் பகுதிக்குள் செல்லாமல் இருக்கத் தடுப்பு ஏற்படுத்தப்பட்டு, போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் முகாமிட்டு நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

சென்னை தமிழகம் மற்றும் புதுவையில் இன்று (செவ்வாய்க்கிழமை) ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு வங்கக் கடல் பகுதியில் மேற்கு வங்க மாநிலம் மற்றும் வங்கதேசத்துக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யாது. வெப்பச்சலனத்தின் காரணமாகவே மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மேட்டூர் அணை நீர் மட்டம்: 104 அடியாக உயர்வு**

மேட்டூர் அணையின் நீர் மட்டம் 104 அடியை தாண்டியது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாகப் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பின.

இதையடுத்து, அங்கிருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், கடந்த ஜூன் 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

இந்நிலையில் தொடர் நீர்வரத்தால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 104.22 அடியாக உயர்ந்துள்ளது.நேற்று மாலை 65 டி.எம்.சி.,யாக இருந்த அணையின் நீர்இருப்பு, இன்று 70.419 டி.எம்.சி.,யாக அதிகரித்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 61,233 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 10,800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

**சோலையாறு அணையில் இருந்து கேரளத்துக்குத் தண்ணீர் திறப்பு**

வால்பாறையை அடுத்த சோலையாறு அணையில் இருந்து கேரள மாநிலத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தென்மேற்குப் பருவமழை வால்பாறை பகுதியில் அதிகளவில் பெய்துள்ளது. இக் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின் முக்கிய அணையாக கருதப்படும் சோலையாறு அணை, கடந்த ஜூன் 28-ஆம் தேதி நிரம்பியது. இதனால், இங்குள்ள இரண்டு மின் நிலையங்களுக்கு மின் உற்பத்திக்காக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதேபோல, சேடல் டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கும் நீர் வெளியேற்றப்படுகிறது. கேரள மாநிலத்துடன் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தப்படி, சோலையாறு அணையில் இருந்து வருடத்துக்கு 12.3 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். இந்த வருடம் இதுவரை வழங்கப்பட்ட தண்ணீர் அளவில் இன்னும் ஒரு டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டியுள்ளது.

இதையடுத்து, பொதுப்பணித் துறை மண்டலப் பொறியாளர் ரங்கநாதன் உத்தரவின்பேரில் சோலையாறு அணையின் ஒரு மதகு வழியாக 580 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சோலையாறு அணைக்கு 3,795 கன அடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 3,958 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணை நீர்மட்டம் 162.65 அடியாக உள்ளது

**சம்பா, தாளடிக்கு விதை நெல் தயார்**

சம்பா, தாளடிக்கு தேவையான விதை நெல் உள்ளது என்றார் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே. ராமசாமி .திருவாரூரில் திங்கள்கிழமை அவர் அளித்த பேட்டி: நிகழாண்டு குறுவை சாகுபடி இல்லை என்பதால், சம்பா மற்றும் தாளடிக்கு தேவையான விதை நெல் உற்பத்தி செய்து இருப்பு வைத்துள்ளோம்.

வேளாண் அலுவலகங்களில் சி.ஆர்.1009 விதை உள்ளது. இந்த ரக நெல்லில் அரிசி சிகப்பு நிறத்தில் வரலாம் என்பதால் மாற்றாக ஆடுதுறை 39, ஆடுதுறை 43, கோ 49, கோ 51 வகை ரக நெல் விதை ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திலும், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திலும் போதுமான இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

40 டன் விதை நெல் மாநிலம் முழுவதும் அனைத்து விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கும் வகையில் மாவட்ட வேளாண் அலுவலகங்களுக்கு பிரித்து அனுப்பப்படும்.

ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய காவிரிப் படுகையில் மண் வளம் நன்றாக உள்ளதாலும், வடிகால் பகுதியென்பதாலும் நெல் முதன்மையாகப் பயிரிடப்பட்டு அதிக மகசூல் எடுக்கப்படுகிறது.

களிமணி, வண்டல் மண், செம்மன் என்று மூன்று வகை மண் உள்ளதால், மண்ணின் தன்மைக்கேற்ப உரிய ரக விதைகளை பயிரிட்டு அதிக உற்பத்தி செய்ய திருவாரூரில் வேளாண் துறையை சேர்ந்த அனைத்து அலுவலர்களுக்கான கருத்தரங்கம் நடைபெறுகிறது. நிகழாண்டு பருவமழை நன்றாக இருக்கும். மேட்டூரிலிருந்து சம்பா சாகுபடிக்கு திறந்துவிடப்படும் தண்ணீரை விவசாயிகள் ஒருங்கிணைந்து சிக்கனமாக பயன்படுத்தினால் கூடுதலாக ஒரு சாகுபடி செய்யலாம். வெள்ள நீரை குளம் குட்டைகளில் தேக்கி வைக்க வேண்டும்.

டெல்டாவில் கடந்த ஆண்டு கையாளப்பட்ட நேரடி நெல்விதைப்பு நல்ல பலனைத் தந்துள்ளதால் நிகழாண்டும் அதைப் பின்பற்றலாம்.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் நேரடி விதைப்பு செய்தால் முளைப்பில் பாதிப்பு இருக்காது.  விவசாயத்தை ஒருங்கிணைந்து செயல்படுத்தினால் தமிழகம் உணவு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக வாய்ப்புள்ளது என்றார் ராமசாமி.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 102.30 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 102.30 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 73,194 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 5,999 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாகப் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி, அவற்றிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

காவிரியில் திறக்கப்படும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால், கடந்த ஜூன் 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கடந்த 2011, நவம்பர் 6-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியாக இருந்தது. அதற்குப் பிறகு இப்போதுதான் 100 அடியைத் தாண்டியுள்ளது.

பூஜைகள் நடைபெற்றன: அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியதால், அணையின் இடது கரையில் உள்ள 16 கண் மதகுப் பகுதியில் பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் கந்தசாமி, உதவிச் செயற்பொறியாளர் கோவலன், மேட்டூர் நகர்மன்றத் தலைவர் லலிதா சரவணன், வருவாய்க் கோட்டாட்சியர் சந்திரன் உள்ளிட்டோர் சிறப்பு பூஜைகள் நடத்தினர். பின்னர், அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியதால், அணை கடல் போல் காட்சியளிக்கிறது. இதைக் காண்பதற்கு சேலம் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள்

வந்து செல்கின்றனர். இதனால்,  அணையின் 16 கண் பாலம் திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

கூடுதலாக 4,000 கன அடி நீர் திறப்பு: மேட்டூர் அணையில் இருந்து குடிநீருக்காக நொடிக்கு 6,800 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை 4 மணி முதல் கூடுதலாக 4 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. இப்போது அணையில் இருந்து மொத்தம் நொடிக்கு 10,800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பிலிகுண்டுலுவுக்கு 79,000 கன அடி நீர்வரத்து:  காவிரியாற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு திங்கள்கிழமை காலை நொடிக்கு 85 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. இது படிப்படியாகக் குறைந்து 79 ஆயிரம் கன அடியானது.

ஒகேனக்கல் அருவிப் பகுதிகளில் உள்ள பாறைகள் தெரியாத அளவுக்கு நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அருவிப் பகுதிக்குள் செல்லாமல் இருக்கத் தடுப்பு ஏற்படுத்தப்பட்டு, போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் முகாமிட்டு நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிறப்பு மாநாடு**

தேன்கனிக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிறப்பு மாநாடு திங்கள்கிழமை தளி எம்எல்ஏ டி.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தேசிய விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் அதுல்குமார் அஞ்ஜான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன், சிவகங்கை தொகுதி எம்எல்ஏ குணசேகரன், மாவட்டச்

செயலாளர் பி.சி.நஞ்சப்பா, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் எம்,லகுமைய்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

விவசாயிகளின் நலனில் அக்கறை செலுத்தாமல், விவசாயிகள் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வரும் மத்திய அரசைக் கண்டிக்கிறோம். வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். பெட்ரோல் டீசல் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும். விவசாயிகளுக்கு மான்ய விலையில் டீசல் வழங்க வேண்டும். அரசுப் புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட 30 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக நடைபெற்ற பேரணியில் பல ஆயிரம் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாகப் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பி, அவற்றிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

காவிரியில் திறக்கப்படும் உபரி நீர் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால், கடந்த ஜூன் 25-ஆம் தேதி 15.51 அடியாக இருந்த நீர்மட்டம், திங்கள்கிழமை காலை 100 அடியைத் தாண்டியது.

கடந்த 2011, நவம்பர் 6-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியாக இருந்தது. அதற்குப் பிறகு இப்போதுதான் 100 அடியைத் தாண்டியுள்ளது.

பூஜைகள் நடைபெற்றன: அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியதால், அணையின் இடது கரையில் உள்ள 16 கண் மதகுப் பகுதியில் பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் கந்தசாமி, உதவிச் செயற்பொறியாளர் கோவலன், மேட்டூர் நகர்மன்றத் தலைவர் லலிதா சரவணன், வருவாய்க் கோட்டாட்சியர் சந்திரன் உள்ளிட்டோர் சிறப்பு பூஜைகள் நடத்தினர். பின்னர், அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

நீர்மட்டம் 100 அடியைத் தாண்டியதால், அணை கடல் போல் காட்சியளிக்கிறது. இதைக் காண்பதற்கு சேலம் மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இதனால், அணையின் 16 கண் பாலம் திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

கூடுதலாக 4,000 கன அடி நீர் திறப்பு: மேட்டூர் அணையில் இருந்து குடிநீருக்காக நொடிக்கு 6,800 கன அடி நீர் திறக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை 4 மணி முதல் கூடுதலாக 4 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டது. இப்போது அணையில் இருந்து மொத்தம் நொடிக்கு 10,800 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

பிலிகுண்டுலுவுக்கு 79,000 கன அடி நீர்வரத்து: காவிரியாற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு திங்கள்கிழமை காலை நொடிக்கு 85 ஆயிரம் கன அடி நீர்வரத்து இருந்தது. இது படிப்படியாகக் குறைந்து 79 ஆயிரம் கன அடியானது.

ஒகேனக்கல் அருவிப் பகுதிகளில் உள்ள பாறைகள் தெரியாத அளவுக்கு நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அருவிப் பகுதிக்குள் செல்லாமல் இருக்கத் தடுப்பு ஏற்படுத்தப்பட்டு, போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லில் குளிக்கவும், பரிசலில் செல்லவும் ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்து நீடிக்கிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் முகாமிட்டு நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

**சோலையாறு அணையில் இருந்து கேரளத்துக்குத் தண்ணீர் திறப்பு**

வால்பாறையை அடுத்த சோலையாறு அணையில் இருந்து கேரள மாநிலத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தென்மேற்குப் பருவமழை வால்பாறை பகுதியில் அதிகளவில் பெய்துள்ளது. இக் கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்து பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின் முக்கிய அணையாக கருதப்படும் சோலையாறு அணை, கடந்த ஜூன் 28-ஆம் தேதி நிரம்பியது. இதனால், இங்குள்ள இரண்டு மின் நிலையங்களுக்கு மின் உற்பத்திக்காக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதேபோல, சேடல் டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கும் நீர் வெளியேற்றப்படுகிறது. கேரள மாநிலத்துடன் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தப்படி, சோலையாறு அணையில் இருந்து வருடத்துக்கு 12.3 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். இந்த வருடம் இதுவரை வழங்கப்பட்ட தண்ணீர் அளவில் இன்னும் ஒரு டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டியுள்ளது.

இதையடுத்து, பொதுப்பணித் துறை மண்டலப் பொறியாளர் ரங்கநாதன் உத்தரவின்பேரில் சோலையாறு அணையின் ஒரு மதகு வழியாக 580 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சோலையாறு அணைக்கு 3,795 கன அடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 3,958 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணை நீர்மட்டம் 162.65 அடியாக உள்ளது.

**பவானிசாகர் அணை   நீர்மட்டம் 75.14 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 75.14 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,884 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,000 கன அடி நீரும்,

வாய்க்காலில் 2,500 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 13.24 டி.எம்.சி.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருப்பூர், பல்லடம், அவிநாசி பகுதி விவசாயிகளின் குறைதீர் கூட்டம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

இதுகுறித்து கோட்டாட்சியர் த.பழனிக்குமார் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருப்பூர் கோட்டத்துக்குள்பட்ட திருப்பூர், பல்லடம், அவிநாசி பகுதியில் உள்ள விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, குறைதீர் கூட்டம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது. மேற்கண்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கூட்டத்தில் பங்கேற்று, தங்களது குறைகளை எடுத்துரைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பருவ நிலை மாற்றம்: கொப்பரை உற்பத்தி பாதிப்பு**

பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் பருவ நிலை மாற்றத்தால் ரூ.5 கோடி மதிப்பிலான கொப்பரை உற்பத்தி பாதிப்பு அடைந்துள்ளது.

பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் 300-க்கும் மேற்பட்ட தேங்காய் கொப்பரை உற்பத்தி உலர்களங்கள் உள்ளன. இப் பகுதியில் உற்பத்தியாகும் கொப்பரைகளை விவசாயிகள் பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் நிலையங்களிலும், வெள்ளகோவில், காங்கயம் பகுதியில் உள்ள தனியார் ஆயில் மில்களுக்கும் விற்பனை செய்கின்றனர்.

உலர்களங்களில் சூரிய ஒளியில் காய வைக்கப்படும் தேங்காய் பருப்பு 7 நாளில் கொப்பரையாக மாறுகிறது. சில நாள்களாக பல்லடம், சுல்தான்பேட்டை பகுதிகளில் கடும் குளிர்காற்றுடன் மழை பெய்து வருவதால், கொப்பரை உற்பத்தி

செய்ய முடியாத சூழல் நிலவுகிறது. இதன் காரணமாக, ரூ.5 கோடி மதிப்பிலான கொப்பரை உற்பத்தி பாதிப்படைந்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து வருகின்றனர்.

**பரம்பிக்குளம் அணை இன்று நிரம்புமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட அணைகளில் (பி.ஏ.பி.) மிக அதிக கொள்ளளவு கொண்ட அணையான பரம்பிக்குளம் அணை செவ்வாய்க்கிழமைக்குள் முழுக் கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் விவசாயிகளிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பொய்த்துப் போன பருவமழையால் அணைப் பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் பி.ஏ.பி. திட்டப் பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டு, பயிரிட முடியாமல் போனது. இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை ஜூன் மாதத் தொடக்கத்தில் இருந்து நன்றாகப் பெய்து வருகிறது.

பி.ஏ.பி. திட்ட அணைகளில் முக்கிய அணையான சோலையாறு அணைப் பகுதியில் பெய்த கன மழையாலும், அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் பெய்த கன மழையாலும் ஜூன் மாதத்தில் நிரம்பியது.

கடந்த 1993-க்குப் பின் 20 ஆண்டுகள் கழித்து 2013-இல் ஜூன் மாதத்தில் அணை நிரம்பியுள்ளது. அதன்பின் தொடர்ந்து சேடல் ஷட்டர் வழியாக பரம்பிக்குளம் அணைக்குத் தண்ணீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியது. சோலையாறு அணையின் முழுக் கொள்ளளவான 160 அடிக்கும் மேலாக வரும் தண்ணீர், முழுமையாக பரம்பிக்குளம் செல்லும் வகையில் இந்த அணை வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனால் பரம்பிக்குளம் அணையின் நீர் மட்டமும் சிறிது சிறிதாக உயர்ந்தது. சோலையாறு அணையில் இருந்து சேடல் ஷட்டர் வழியாக வெளியேறும் நீர், முழுமையாக பரம்பிக்குளத்துக்குச் சென்றது. இதையடுத்து திங்கள்கிழமை காலை

8 மணி நிலவரப்படி 69.4 அடியாக இருந்த பரம்பிக்குளம் அணைக்கு நொடிக்கு 4591 கன அடி தண்ணீர் வந்தது. இதனால் திங்கள்கிழமை மாலை 5 மணி நிலவரப்படி நீர்மட்டம் 71.25 அடியாக உயர்ந்தது. அணையின் மொத்தக் கொள்ளளவு 72 அடி. அணையில் இருக்கும் நீரின் அளவு 17.82 டி.எம்.சி.

இந்தச் சூழ்நிலையில் சோலையாறு அணையில் இருந்து கேரளத்துக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டியுள்ளது. இதனால் சோலையாறு அணையில் இருந்து கேரளத்துக்கு நொடிக்கு 900 கன அடி வீதம் திங்கள்கிழமை முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பரம்பிக்குளத்துக்கு வரும் தண்ணீரின் அளவு சற்று குறையும்.

பரம்பிக்குளம் அணை கடந்த ஆண்டு அதாவது 2012-இல் பருவ மழை பொய்த்ததால் நிரம்பவில்லை. இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நிரம்பியுள்ளது. இதற்கு முன்பு 2011-இல் நிரம்பியது.

கான்டூர் கால்வாய்ப் பணிகளை விரைந்து முடித்திருந்தால் திருமூர்த்தி அணைக்குப் பரம்பிக்குளத்தில் இருந்து தண்ணீரை அனுப்ப முடியும். இன்னும் ஓரிரு நாளில் இப்பணிகளை முடிக்க பொதுப்பணித் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ள நிலையில் சோலையாறு அணையில் இருந்து கேரளத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பரம்பிக்குளம் அணை செவ்வாய்க்கிழமை நிரம்பும் சூழ்நிலையில் அங்கிருந்து கான்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் கொண்டு செல்லத் தேவையான ஏற்பாடுகளையும் பொதுப்பணித் துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

பருவமழை தீவிரமடைவதற்கு முன்பாகவே பி.ஏ.பி. திட்டத்தின் முக்கிய அணைகள் நிரம்பியுள்ளது குறித்து விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். விரைவில் பாசனத்துக்குக் காலதாமதமில்லாமல் தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கள ஆய்வு**

போடி அருகே தேவாரம் பகுதியில் வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் விவசாய நிலங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

வைகை அணை அருகே உள்ள குள்ளப்புரம் வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் போடியை அடுத்துள்ள தேவாரம் பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இதில் பயிர் சாகுபடி முறைகள் மற்றும் விவசாய நிலங்களைப் பராமரிப்பது குறித்து விவசாயிகளிடம் நேரில் கேட்டறிந்து, செயல் விளக்கம் பெற்றனர்.

மேலும் மண் மாதிரி எடுத்தல், நாற்று நடுதல், உரமிடுதல், காய்கறி பறித்தல் போன்ற விவசாய பணிகளில் மாணவர்கள் ஈடுபட்டு செயல்முறை பயிற்சி பெற்றனர். மாணவர்களுக்கு விவசாயி சிங்கராஜ் வழிகாட்டி பயிற்சி அளித்தார்.

**வறட்சி நிவாரணத்தில் கொய்யா தோட்டங்களை இணைக்க முன்னாள் எம்எல்ஏ., கோரிக்கை**

பழனி அருகே ஆயக்குடி பகுதியில் உள்ள கொய்யா தோட்டங்களை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் சேர்க்க முன்னாள் எம்எல்ஏ., கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் எம்எல்ஏ.,வும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவருமான பழனிவேல், மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில், கடந்த 2012-இல் தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழக அரசு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கி வருகிறது.

இந்நிலையில் பழனி அருகே ஆயக்குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுமார் 20,000-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், கொய்யா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதி கொய்யா தோட்டங்களில் கடும் வறட்சி காரணமாக காய்கள் விளைச்சலில்லாததோடு மரங்களும் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு  ஏக்கருக்கு சுமார் 1 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே மாவட்ட ஆட்சியர் விவசாயிகளிடம் விசாரணை மேற்கொண்டு, உரிய இழப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.07.2013**

## நான்குநேரியில் அட்மாவிவசாயிகளுக்கு பயிற்சி

நான்குநேரி:நான்குநேரியில் அட்மா விவசாயிகளுக்கு தென்மரம் ஏறும் கருவி செயல் விளக்க முகாம் நடந்தது.முகாமை நெல்லை வேளாண் இணை இயக்குநர் சவுந்திரராஜன் துவக்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குநர் முருகேஷ், தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆசீர் கனகராஜ், வேளாண் அலுவலர் அலாய்ஸ்ராஜன், கிள்ளிக்குளம் கல்லூரி பேராசிரியர் திருவுடைநம்பி, அட்மா மேலாளர் வானுமாமலை, அட்மா தலைவர் சிவகிருஷ்ணராஜா உட்பட பலர் பேசினர். முகாமில் விவசாயிகளுக்கு நவீன கருவி மூலம் தென்மரம் ஏறுவது குறித்து அதிகாரிகள் செயல் விளக்கம் அளித்தனர்.பின்னர் 5 விவசாயிகளுக்கு தென்மரம் ஏறும் கருவி வழங்கப்பட்டது.முகாமில் விவசாயிகள், வேளாண் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## வாழை சாகுபடி பரப்பு குறைவு: இரு மடங்காக விலை உயர்வு

கோபிசெட்டிபாளையம்: வாழை விலை இரு மடங்காக உயர்ந்ததால், கோபி சுற்று வட்டாரத்தில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோபி மற்றும் சுற்று வட்டாரத்தில், மூன்று பாசனங்களுக்கு உட்பட்ட வேட்டைக்காரன் கோவில், பங்களாபுதூர், கள்ளிபட்டி, டி.என்.பாளையம், கோபி, கொளப்பலூர், கூகலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கதளி, நேந்திரம், ரோபஸ்டரா, ரஸ்தாளி, மொத்தன், பச்சைவாழை, பூவன், தேன் வாழை ஆகிய ரக வாழை பயிரிடப்பட்டுள்ளன.அறுவடை செய்யப்படும் வாழை, கோபி

வேளாண் விற்பனை சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. வாழை ஆறுவடை சீஸனில் சங்கத்துக்கு, 7,000 முதல், 10 ஆயிரம் வாழை தார்கள் வரை வரத்தாகுகிறது. சென்ற சில வாரங்களுக்கு முன், வாழை அறுவடை சீஸன் நேரத்தில் கதளி ஒரு கிலோ, 25 ரூபாய், நேந்திரம் ஒரு கிலோ, 16 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 310 ரூபாய், செவ்வாழை, 440 ரூபாய், ரோபஸ்டரா, 210 ரூபாய், மொத்தன், 200 ரூபாய், பச்சைநாடன், 210 ரூபாய், பூவன், 220 ரூபாய்க்கு விற்கப்பட்டது.சென்ற இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், கிணற்று பாசனம் மூலமே வாழை அறுவடை செய்யப்பட்டுள்ளது. கிணற்று பாசனத்தில் வாழையின் பரப்பளவு குறைந்து விட்டது. கோபி வேளாண்மை விற்பனை சங்கத்துக்கு, 4,000 வாழைத்தார் மட்டுமே வரத்தாகிறது. வாழைத்தார் குறைந்ததால், விலை இரு மடங்களாக உயர்ந்துள்ளது.நேற்று முன்தினம், கோபி வேளாண்மை விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில் கதளி ஒரு கிலோ, 50 ரூபாய், நேந்திரம் ஒரு கிலோ, 41 ரூபாய், பூவன் தார், 1,000 ரூபாய், தேன்வாழை, 600 ரூபாய், செவ்வாழை, 770 ரூபாய், ரொபஸ்டிரா, 370 ரூபாய், மொத்தன் வாழை, 400 ரூபாய், பச்சைநாடன், 250 ரூபாய், ரஸ்தாளி, 625 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வாழை விலை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.விவசாயிகள் கூறியதாவது: நடப்பாண்டு துவக்கத்தில், மஞ்சள் விலை வீழ்ச்சி, கரும்பு வெட்டு கூலி உயர்வு போன்ற பிரச்னையால், வாழை அதிகளவில் பயிரிட்டோம். சில வாரங்களுக்கு முன் வாழை விலையும் வீழ்ச்சியடைந்தது. பருவமழை பொய்த்ததால், நடப்பாண்டு குறைவான வாழை சாகுபடி செய்துள்ளதால், பெரும்பாலான இடங்களில் வாழை அறுவடை பணி நிறைவடைந்துள்ளது.ஆடிப்பண்டிகை உள்ளிட்ட காரணங்களால், வாழையின் தேவை அதிகரிக்க துவங்கி உள்ளது. குறைவான வாழை உள்ளதால், வாழை விலை தற்போது இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டில் ஒரு கிலோ, 25 ரூபாய் வரை விற்கப்பட்டது. நடப்பாண்டு ஒரு கிலோ கதளி, 50 ரூபாயாக உயர்ந்துள்ளது. விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

## செய்யாறு நீர் பாசனத்தில் விவசாயம் கண்களுக்கு விருந்தளிக்கும் நெற்பயிர்

காஞ்சிபுரம்:செய்யாற்றில், ஆழ்துளை கிணறுகள் மூலம் நீர் பெற்று, காவாந்தண்டலம் கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர், கண்களுக்கு விருந்தளிக்கும் விதமாக உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உருவாகும் செய்யாறு, போளூர், கலசபாக்கம், ஆரணி, செய்யார், காஞ்சிபுரம் மாவட்டமான பெருநகர், மாகரல், காவாந்தண்டலம் வழியாக,

திருமுக்கூடலை சென்றடைகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மூன்று ஆறுகளில், செய்யாற்றில் மட்டுமே, தற்போது நிலத்தடிநீர் வளமாக உள்ளது. மணல் குவாரிகளால், இதிலும், நிலத்தடி நீர் படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. மணல் குவாரியை தடுத்து நிறுத்த, கிராம மக்கள் பலமுறை போராடியும், அரசு இதுவரை, நடவடிக்கை எடுக்கவில்லை. காஞ்சிபுரம் அடுத்துள்ள காவாந்தண்டலம் ஏரி, பல ஆண்டுகளாக வறண்டே கிடக்கிறது.

இதனால், அப்பகுதி விவசாயிகள், செய்யாற்றங்கரையில் ஆழ்துளை கிணறுகளை அமைத்து, இதன் மூலம் கிடைக்கும் நீரில், விவசாயம் செய்து வருகின்றனர். இதனால், ஆற்றங்கரையை ஒட்டியுள்ள, 100 ஏக்கர் விளை நிலங்கள், மூன்று போகம் பயிரிடப்பட்டு, அப்பகுதி முழுவதும் கண்களுக்கு விருந்தளிக்கும் விதமாக காட்சியளிக்கிறது.

இதுகுறித்து, காவாந்தண்டலம் ஊராட்சி தலைவர் கிருபாகரன் கூறுகையில், ""எங்கள் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், 30 ஆண்டுகளாக, ஆற்று நீரில் சாகுபடி செய்து வருகின்றனர். ஏரி நிரம்பிவிட்டால், ஆற்று நீரை எதிர்பார்க்க மாட்டோம்," என்றார்.

## ஆடி பட்டத்திற்கு விதைகள் தயார்: மழையின்றி விவசாயிகள் குழப்பம்

காஞ்சிபுரம்:ஆடிப் பட்டத்தையொட்டி, சிறுகாவேரிபாக்கம் வேளாண்மை விரிவாக்க மையத்தில், விதைகள் விற்பனை வேகமாக நடந்து வருகிறது. ஆனால், போதிய மழையில்லாததால், விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.காஞ்சிபுரம் அடுத்த, சிறுகாவேரிபாக்கத்தில், வேளாண்மை விரிவாக்க மையம் செயல்படுகிறது. இங்கு, ஏடிடி 43, ஏடிடி 45 ரக நெல் விதைகள், ஏடிடி 5 உளுந்து, கோசிபி காராமணி, கோ 6 பச்சை பயறு, விஆர் 2 மணிலா ஆகியவை விற்பனைக்கு வந்துள்ளன.ஆடிப் பட்டத்தையொட்டி, தாமல், முசரவாக்கம், மேல்ஒட்டிவாக்கம், பெரும்பாக்கம், முட்டவாக்கம், பாலுசெட்டிசத்திரம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், இந்த விதைகளை வாங்கி சென்றுள்ளனர்.கடந்த 20 நாட்களில், மேற்கண்ட நெல் விதைகள், 22 டன்னுக்கு மேல் விற்பனையாகியுள்ளது. இதேபோல், தானிய வகை விதைகளும், 10 டன் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. போதிய மழையில்லாததால், விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.இதுகுறித்து, முட்டவாக்கத்தைச் சேர்ந்த விவசாயி ராமகிருஷ்ணன் கூறுகையில், ""ஆடி மாதம் 18ம் தேதி, நெல் விதைப்பதற்காக, விதைகளை வாங்கி, தயார் நிலையில் வைத்துள்ளோம். ஆனால், மழை தான் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. வானம் தொடர்ந்து இழுத்து காய்கிறது. கடந்த ஆண்டு இதே மாதத்தில், விடப்பட்ட நாத்து நடமுடியாத அளவிற்கு, வானம் காய்ந்தது. இதனால், தற்போது நாற்று விடலாமா என, குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது,'' என்றார்.

## பிளாட்களாக மாறும் நிலங்கள்: விவசாயம் பாதிக்கும் அபாயம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் விளைநிலங்கள் பிளாட்டுகளாக மாறிவருவதால் விவசாயம் பாதிக்கும் அபாயம் உள்ளது.

சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. ஏரி பாசனம்,

ஆற்று பாசனத்தை நம்பி இருக்காமல் கிணற்று பாசனத்தையே நம்பி இது நாள் வரை விவசாயம் செய்தனர்.

கடந்த ஆண்டு சங்கராபுரம் பகுதியில் 50 ஆயிரம் ஏக்கரில் நெல், 25 ஆயிரம் ஏக்கரில் கரும்பு, ஆயிரம் ஏக்கரில் மணிலா, பருத்தி மற்றும் தோட்டப் பயிர்கள் பயிர் செய்திருந்தனர். விவசாய வேலைகளை செய்ய ஆட்கள் கிடைக்காததாலும், மின் தடை, தண்ணீர் பற்றாக்குறை, உர தட்டுப்பாடு போன்ற காரணங்களால் விளை நிலங்களை ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் அதிக விலைக்கு விவசாயிகள் விற்று வருகின்றனர். சிலர் நிலங்களை தரிசாக போட்டு வைத்துள்ளனர்.

பிளாட்கள் சங்கராபுரம் பகுதியில் சேமபாளையம், சோழம்பட்டு, ஆலத்தூர், பூட்டை, அரசம்பட்டு, குளத்தூர், கடுவனூர், மைக்கேல்புரம், சவரியார்பாளையம், மூங்கில்துறைப்பட்டு ஆகிய இடங்களில் விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறி உள்ளன.ஆள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன தொழில்நுட்பங்களையும், குறைந்த வாடகையில் இயந்திரங்களை பயன்படுத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். சொட்டு நீர் பாசன விழிப்புணர்வு ஏற்படுத்தி மானிய விலையில் குழாய்கள் வழங்க வேண்டும். செம்மை நெல் சாகுபடி போன்ற நவீன விவசாயம் பற்றி பயிற்சி அளிக்க வேண்டும். சங்கராபுரம் பகுதியில் குடியிருப்பு பகுதிகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருவதால் நன்றாக விவசாயம் நடக்கும் நிலங்களை கூட அதிக விலைக்கு ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் விற்கின்றனர்.

விவசாய விளை நிலங்கள் பிளாட் டுகளாக மாறி வருதை தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வசம்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி:மருத்துவத்திற்கு பயன் படக்கூடிய வசம்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் மருத்துவத்திற்கு பயன்படக்கூடிய கோலியாஸ்

அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மற்றொரு பயிரான வசம்பும் சாகுபடி செய்யப்படுகிறது. வசம்பிற்கு பிள்ளை வளர்த்தி என்று மற்றொரு பெயரும் உள்ளது. ஓராண்டு பயிரான இதன் வேர் மற்றும் தண்டு பகுதிகள் மருத்துவத்திற்கு பயன்படுகிறது. மருத்துவ குணத்திற்கு பயன்படும் வசம்பு, சேலம் மாவட்டம் ஆத்தூர், தம்மம்பட்டி, எடைபாடி பகுதியில் மட்டுமே அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள விவசாய நிலங்களிலும் வசம்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின் றனர். நெல்லுக்கு நாற்று விடுவது போல் வசம்புக்கும் நாற்று விட்டு சாகுபடி செய்கின்றனர். சாகுபடிக்கு பின்பு நிலத்தில் தண்ணீர் எப்போதும் இருக்க வேண்டும். அறுவடை காலங்களில் ஆந்திரா மாநிலம் ஐதராபாத் பகுதி நிறுவனத்தினர் நேரடியாக வந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றனர். ஆர்வம் தண்ணீர் வசதி உள்ள கல்வராயன்மலை அடிவார பகுதியான மட்டப்பாறை, மாத்தூர் உள்ளிட்ட பல பகுதியில் வசம்பு சாகுபடி செய்யப்படுகிறது. மருத்துவ குணத்திற்கு பயன்படும் வசம்பு லாபம் தருவதால் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## தமிழகம், கேரளாவில் முட்டைவிலை 315 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலையில் ஏற்பட்டுள்ள தொடர் சரிவு, பண்ணையாளர்களை, சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 325 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஒரே நாளில், 10 காசு குறைத்து, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.சில தினங்களாக, முட்டை விலையில்

ஏற்பட்டுள்ள தொடர் சரிவு, பண்ணையாளர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 332, பெங்களூரு, 325, மைசூரு, 325, ஹைதராபாத், 289, மும்பை, 323, விஜயவாடா, 308, கோல்கத்தா, 348, பர்வாலா, 265, டில்லி, 285. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 81 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## சாகுபடி செலவை குறைக்க புதிய யுக்திஊடுபயிரில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

தர்மபுரி: சாகுபடி செலவை குறைக்க, விவசாயிகள் ஊடுபயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.தர்மபுரி மாவட்டம் விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் மா, தென்னை, கரும்பு, மஞ்சள், பருத்தி, மரவள்ளி கிழங்கு, கேழ்வரகு, மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்களாகன வெங்காயம், வெண்டைக்காய், அவைரக்காய் உள்ளிட்ட காய்கறிகளும், மலர் வகைகளும் சாகுபடி செய்யப்படுகிறது.மாவட்டத்தில் போதிய பருவ மழையில்லாததாலும், விளை பொருள்களுக்கு போதிய விலையில்லாதது மற்றும் ஆட்கள் பற்றாக்குறையால் சாகுபடி செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.கடந்த, இரு ஆண்டுகளாக மஞ்சளுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஆனாலும் மாவட்டத்தில் தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி என மாவட்டம் முழுவதும் விவசாயிகள் , 8 ஆயிரம் ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர்.மஞ்சள் சாகுபடி செலவை ஈடுகட்டும் வகையிலும், விவசாயிகள் வெங்காயத்தை ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளனர்.இது குறித்து

நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

மஞ்சள் சாகுபடி செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதுடன், போதிய விலை கிடைக்காத நிலை உள்ளது. ஆனாலும் இந்தாண்டு மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.இதனால் மாவட்டம் முழுவதும் பரவலாக விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். மஞ்சள் சாகுபடி செலவை குறைக்க வேளாண்மைத்துறை அலுவலர்களின் ஆலோசனையின் படி ஊடுபயிராக வெங்காயம் மற்றும் நிலக்கடலை உள்ளிட்ட குறுகிய காலபயிர்களை சாகுபடி செய்துள்ளோம்.இதனால் உழவு செலவு மற்றும் களை எடுத்தல் உள்ளிட்ட செலவுகள் குறைகிறது. மேலும் மஞ்சளுக்கு பாய்ச்சும் தண்ணீர் மற்றும் உரங்கள் மூலம் ஊடுபயிர்களுக்கு தேவையான தண்ணீர் மற்றும் சத்துக்கள் கிடைக்கிறது. ஊடுபயிர்கள் மூலம் கிடைக்கும் வருமானம் முக்கிய பயிரான மஞ்சள் சாகுபடிக்கான மொத்த செலவை குறைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## யூரியா உற்பத்தி இலக்கை எட்ட ரூ.40,000 கோடிதேவை

புதுடில்லி:வரும், 2016-17ம் நிதிஆண்டில், நாட்டின் யூரியா உற்பத்தி திறனை, 3.30கோடி டன்னாக அதிகரிக்க, குறைந்தபட்சம், 40 ஆயிரம்கோடி ரூபாய்தேவை என, உரங்கள் துறைக் குழு தெரிவித்துள்ளது.மத்திய திட்டக்குழு, நடப்பு 12வது ஐந்தாண்டு (2012-17) திட்டத்தின் கீழ், உரங்கள் துறை செயலர் தலைமையில், செயல்பாட்டுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.பற்றாக்குறை:இக்குழு அளித்துள்ள அறிக்கை விவரம்:நாட்டின் யூரியா உற்பத்தி, 2.20கோடி டன்னாக உள்ளது. அதே சமயம், யூரியாவிற்கானதேவை, 3.20கோடி டன்னாக உள்ளது. இந்த பற்றாக்குறையை சமாளிக்க, உரத் துறையில் அதிக முதலீடுதேவைப்படுகிறது. கடந்த 70' களிலும், 90'களிலும், உரத்துறையில் அதிக அளவில் முதலீடுமேற்கொள்ளப்பட்டது. ஆனால், 10 மற்றும் 11வது ஐந்தாண்டு திட்ட

காலத்தில், உரத்துறையில்மேற்கொள்ளப்பட்ட முதலீடு மிகவும் குறைவாகவே இருந்தது. கடந்த 2010-11ம் நிதிஆண்டின் இறுதி நிலவரப்படி, உரத்துறையில், 27,247கோடி ரூபாய்அளவிற்கே முதலீடுமேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப, இதர துறைகளில், முதலீட்டின் மீதான வருவாய்அதிகரித்து உள்ளது. ஆனால், உரத் துறையில், முதலீட்டின் மீதான வருவாய், மிகக் குறைவாகவே உள்ளது. இதனால், உரத் துறை, புதிய முதலீடுகளை ஈர்க்கத் தவறி விட்டது.வரும், 2016-17ம் நிதிஆண்டிற்குள், நாட்டின் யூரியா உற்பத்தி திறனை, 1.20கோடி டன் அதிகரித்து, 3.37கோடி டன்னாக உயர்த்தவேண்டும். இதற்கு, குறைந்தபட்சம், 40 ஆயிரம்கோடி ரூபாய்தேவைப்படும்.

அதிக அளவில் எரிவாயு வளம் உள்ள நாடுகளுடன், கூட்டு திட்டங்கள் மூலம், இந்த இலக்கை எட்ட முயற்சிமேற்கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.புதிய முதலீடு:இதனிடையே, மத்திய அரசு, யூரியா முதலீட்டு கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, உரத்துறையில் புதிய முதலீடுகளைமேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.உரத் தொழிற்சாலை அமைக்க அல்லது விரிவாக்கம் செய்யும் நிறுவனங்களுக்கு, முதலீட்டின் மீது, வரிக்கு பின், 12 சதவீத வருவாய்கிடைக்கவும், வகை செய்யப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.07.2013**


**நீர்வரத்து அதிகரிப்பால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 75 அடியானது**



ஈரோடு: பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாகவே அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.பவானிசாகர் அணையில் நேற்று காலை அணைக்கு 5,884 கனஅடி வீதம் நீர்வரத்து இருந்தது. அணையின் கொள்ளவான 105 அடியில் நீர்மட்டம் 75.14 அடியாகவும் உள்ளது. அணையிலிருந்து ஆற்றின் வழியே 1000 கனஅடியும், கீழ்பவானி பாசனத்துக்கு வாய்க்காலில் 2000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.அக்டோபர் முதல் வடகிழக்கு பருவமழை துவங்கி விடும். இந்த சீசனிலும் நீர்வரத்து அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதால் இந்த ஆண்டு பவானிசாகர் அணை கட்டாயம் நிரம்பும்.

இதனால் பாசனத்துக்கும் குடிநீருக்கும் நீக் விநியோகத்தில் சிரமம் இருக்காது என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**கர்நாடகாவில் கனமழை கே.ஆர்.எஸ், கபினியில் இருந்து 65,000 கனஅடி தண்ணீர் திறப்பு**



பெங்களூர்: கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ். கபினி, ஹாரங்கி அணைகள் முழுமையாக நிரம்பியுள்ளன. அணைகளில் இருந்து தமிழகத்திற்கு 65 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.காவிரி டெல்டா பகுதியில் நல்ல மழை பெய்து வருவதால், நேற்று மாலை நிலவரபடி 124.80 அடி உயரம் கொண்ட கே.ஆர்.எஸ். அணையில் 122.75 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 50 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி வினாடிக்கு 39 ஆயிரத்து 300 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் நேற்று காலை நிலவரப்படி 2,281.75 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்த வினாடிக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.குடகு மாவட்டத்தில் மொத்தம் 2,859 அடி உயரமுள்ள ஹாரங்கி அணையில் 2,857.64 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு

வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 9 ஆயிரத்து 546 கன அடி திறக்கப்பட்டுள்ளது.

ஹாசன் மாவட்டத்தில் உள்ள ஹேமாவதி அணை 2922 அடி உயரம் கொண்ட அணையில் 2,921 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 24 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பகுதியில் மழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகள் நிரம்பி வருவதை தொடர்ந்து கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளில் இருந்து தமிழகத்திற்கு வினாடிக்கு 55 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.